ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/68 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/68 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பி. 3/2021 (III)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 54 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 71 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ட) என்னும் பந்தியின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபையினதும் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்ரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 26.*

**ஒழுங்குவிதிகள்**

***1.*** இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கூட்டாட்சியாதனத்தை முகாமை செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1A – PG 6794 – 364 (2024/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I

### பொது வாழ்வசதிகளும் பொது அம்சங்களும் பற்றிய சான்றிதழை வழங்குதல்

*2. (1) இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 3அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியின் கீழ் கட்டிடத்தின் கூட்டாட்சிச் சிறுகூறுகளின் இருப்பாட்சியாளர்களின் நன்மைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் வழங்கப்பட்ட பொது வாழ்வசதிகள் திருப்திகரமானவையாக உள்ளனவென்றும் கூட்டாட்சியாதனத்தின் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, நிருவாகம், பேணுகை அல்லது முகாமை தொடர்பாகச் செய்யப்பட்ட ஒழுங்கேற்பாடுகள் திருப்திகரமானவையாக உள்ளனவென்றும் சான்றுப்படுத்தி*

*ஆணைக்குழுவிடமிருந்தான சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உட்கருதுகின்ற ஏதேனும் கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரர், இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.*

*(2) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 3ஆ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்துக்காக வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பொது வாழ்வசதிகள் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவென்றும் உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்தின் பொது அம்சங்கள், முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் அத்தகைய பொது அம்சங்களின் தகுந்த கட்டுப்பாடு, நிருவாகம், பேணுகை அல்லது முகாமையை உறுதிப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தில் தகுந்தமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளனவென்றும் சான்றுப்படுத்தி ஆணைக்குழுவிடமிருந்தான சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உட்கருதுகின்ற ஏதேனும் தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரர் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர் மற்றும் அபிவிருத்தியாளர் இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்தில் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.*

*(3) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் பிரிவு 3இ இன் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் கட்டிடத்தின் கூட்டாட்சிச் சிறுகூறுகளின் இருப்பாட்சியாளர்களின் நன்மைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் வழங்கப்பட்ட பொது வாழ்வசதிகள் திருப்திகரமானவையாக உள்ளனவென்றும் கூட்டாட்சியாதனத்தின் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, நிருவாகம், பேணுகை அல்லது முகாமை தொடர்பாகச் செய்யப்பட்ட ஒழுங்கேற்பாடுகள் திருப்திகரமானவையாக உள்ளனவென்றும் சான்றுப்படுத்தி ஆணைக்குழுவிடமிருந்தான சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உட்கருதுகின்ற ஏதேனும் பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரர் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர் மற்றும் அபிவிருத்தியாளர் இதற்கான அட்டவணை III இல் தரப்பட்டுள்ள படிவத்தில் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.*

*3. (1) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், விடயத்துக்கேற்ப, கூட்டாட்சியாதனத்தின், தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரரினால் அல்லது சொந்தக்காரினால் மற்றும் அபிவிருத்தியாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் ஆவணங்களுடன் முப்பிரதிகளில் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்:-*

*(அ) ஓர் உரிமம்பெற்ற நிலஅளவையாளரினால் அல்லது நிலஅளவையாளர் தலைமையதிபதியின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு வரையப்பட்ட, விடயத்துக்கேற்ப, கூட்டாட்சி வரைபடம், தற்காலிகக் கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம்;*

*(ஆ) இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட இயைபான துறைகளில் உரியமுறையில் தகைமைபெற்ற ஆட்களினால் கையொப்பமிடப்பட்ட பொது வாழ்வசதிகள் தொடர்பான சேவைகளும் வரைபடங்களும் பற்றிய அறிக்கையொன்று;*

*(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபான கட்டிட வரைபடம்;*

*(ஈ) ஒரு தற்காலிகக் கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் தொடர்பான விண்ணப்பமொன்றின் விடயத்தில், கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட செல்லுபடியான கட்டிட அனுமதிப்பத்திரமொன்று;*

*(உ) ஒரு கூட்டாட்சி வரைபடத்தின் அல்லது ஒரு பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தின் விடயத்தில், பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடத்துக்காக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட இசைந்தொழுகுகைச் சான்றிதழ்;*

*(ஊ) கட்டிடத்தின் கட்டமைப்புச்சார் வரைபடமும் வரைவுபெற்ற சிவில் பொறியியலாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றும்;*

(எ) விடயத்துக்கேற்ப, கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் தொடர்பில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பெனியொன்றினால் வழங்கப்பட்ட காப்புறுதிச் சான்றிதழொன்று; அத்துடன்

(ஏ) ஆகக்குறைந்தது 10 ஆண்டு அனுபவத்தையேனும்கொண்ட உரிமம்பெற்ற ஒரு பிரசித்த நொத்தாரிசுவினால் வழங்கப்பட்டதும் கூட்டாட்சிக் கட்டிடம் அமைந்துள்ள காணி தொடர்பானதுமான உரித்தறிக்கையொன்று.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து மேலதிகமாக, அந்நோக்கத்துக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறெவையேனும் ஆவணங்களைத் தேவைப்படுத்தலாம்.

**4**. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தைக் கவனத்திட்கொள்ளும் நோக்கத்துக்காக, 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து மேலதிகமாக, உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி வேலையின் பொருத்தமானதன்மை பற்றி ஆணைக்குழு தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான எவையேனும் வரைபடங்களுடன் சேர்த்து ஆதனத்தின் எதிர்காலப் பேணுகைக்காகச் செய்யப்பட்ட ஒழுங்கேற்பாடுகளைக் காட்டுகின்ற எவையேனும் சான்றுப்படுத்தப்பட்ட தகவல்களைக் கொடுத்துதவும்படி சொந்தக்காரர் தேவைப்படுத்தப்படலாம்.

**5**. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் விண்ணப்பத்துடன்சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட, விடயத்துக்கேற்ப, கூட்டாட்சி வரைபடம், தற்காலிக கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம்-

(அ) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தினதும் இவ்வொழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பின்வரும் ஒழுங்குவரிசைப்படி இருத்தல் வேண்டும்:-

(i) அட்டைப் பக்கம்;

(ii) சுட்டி;

(iii) வரலாற்றுடன் காணியையும் கட்டிடத்தையும் குறித்துக்காட்டுகின்ற நிலஅளவை வரைபடம்;

(iv) கட்டிடத்தின் வகையும் கட்டிடத்தின் பாவனையும் உரித்தின் விபரங்களும்;

(v) எல்லைகளுடன் கூட்டாட்சிச் சிறுகூறுகளையும், துணைநிலையான சிறுகூறுகளையும் பொது அம்சங்களையும் காட்டுகின்றனவாக அவசியமான விபரங்களுடனான மாடிகளுக்கான வரைபடம்;

(vi) அத்தகைய கூட்டாட்சிச் சிறுகூறின் எல்லைகளையும், வரிமதிப்பீட்டிலக்கத்தையும், எல்லையின் விபரங்களையும், பரப்பளவையும், பங்குப்பெறுமதியின் நூற்றுவீதத்தையும் கொண்டுள்ள அட்டவணை;

(vii) பொது அம்சங்கள் பற்றிய நிரல்;

(viii) ஒவ்வொரு சிறுகூறினதும் பரிமாண வரைபடம்;

(ix) செங்குத்தான பிரிவு; அத்துடன்

(x) அவசியமென ஆணைக்குழு கருதக்கூடியவாறான வேறெவையேனும் விபரங்கள்.

**6**. கூட்டாட்சி வரைபடம், தற்காலிகக் கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தைத் தயாரிக்கும்போது, பின்வரும் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்:-

(அ) வரைபடமானது முப்பிரதிகளில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வரைபடத்தினதும் முதலாவது பக்கத்தில், விடயத்துக்கேற்ப, ''மூலப்பிரதி', ''இணைப்பிரதி' மற்றும் ''முப்பிரதி' என்ற சொற்கள் வாசிக்கத்தக்கனவாக எழுதப்படுதலும் வேண்டும்;

(ஆ) வரைபடத்தின் ஒவ்வொரு பக்கத்திலும், மேல் வலதுபக்க மூலையில், விடயத்துக்கேற்ப, "கூட்டாட்சி வரைபடம்', "தற்காலிகக் கூட்டாட்சி வரைபடம்', "பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம்", "மீள்பிரிவு வரைபடமொன்று" அல்லது "ஒன்றுசேர்க்கப்பட்ட வரைபடம்' என்ற சொற்கள், வரைபடத்தின் இலக்கத்துடன் சேர்த்து எழுதப்படுதல் வேண்டுமென்பதுடன் வரைபடத்தின் நோக்கத்தையும் குறித்துரைத்தலும் வேண்டும்;

(இ) வரைபடத்தின் ஒவ்வொரு பக்கமும் பின்வரும் முறையில் மேல் வலதுகை மூலையில் இலக்கமிடப்படுதல் வேண்டும்; அதாவது, 10 பக்கங்கள் இருக்கும் போது, முதலாம் பக்கத்திலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு பக்கமும், 10 இன் 1, 10 இன் 2, 10 இன் 3 எனவும் அவ்வாறாகவும் இலக்கமிடப்படுதல் வேண்டும்.

(ஈ) "A" தரத் தாளைப் பயன்படுத்தி வரைபடம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகள் இருப்பின் மற்றும் முதலாவது தொகுதி 10 பக்கங்களைக் கொண்டிருப்பின், இரண்டாவது தொகுதி 20 இன் 11 என்னும் தொடர்ச்சியான இலக்கத்துடன் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்;

(உ) வரைபடமானது அச்சிடப்படுதல் வேண்டுமென்பதுடன், ஓர் அட்டைப் பக்கத்தையும் சுட்டியையும் கொண்டிருத்தலும் இதழ்களை ஒழுங்கமைப்பதில் ஒழுங்குவிதி 5 (ஆ) இல் தரப்பட்டுள்ளவாறான ஒழுங்குவரிசைக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும். பக்கத்தின் தடிப்பம், 120 கிராம்களாக அல்லது அதற்கதிகமாகவிருத்தல் வேண்டும். (ஓர் இதழின் எடை, ஒரு சதுர மீற்றருக்கு 120 கிராம்களுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்). வரைபடமானது பலமாகக் கட்டப்பட்ட ஒரு புத்தக வடிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும். அட்டைப் பக்கத்தில் வரைபடத்தின் நோக்கமும் இலக்கமும், நிலஅளவையாளரின் முகவரியும் ஏனைய இயைபான விபரங்களும் அச்சிடப்படுதல் வேண்டும் என்பதுடன், எவையேனும் விளம்பரங்களையோ அல்லது படங்களையோ அது கொண்டிருத்தலுமாகாது; அத்துடன்

(ஊ) இயைபான வரைபடத்தைத் தயாரித்த நிலஅளவையாளர், வரைபடத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் தனது கையொப்பத்தையிட்டு இலச்சினையைப் பொறித்தலும் வேண்டும்.

**7.** விடயத்துக்கேற்ப, கூட்டாட்சி வரைபடம், தற்காலிகக் கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் என்பவற்றிலான விபரங்கள் பின்வரும் முறையில் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்:-

(அ) கூட்டாட்சிச் சிறுகூறொன்றின் பாகங்கள், உட்புற அணுக்கத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தளங்களைக்கொண்டுள்ள சந்தர்ப்பங்களில், வரைபடத்தில் அதியுச்சக் கூட்டாட்சிச் சிறுகூறின் பாகங்கள், ஒவ்வொரு மாடி தொடர்பிலும், அத்தகைய ஒவ்வொரு பாகத்தினதும் எல்லைகள் ஒழுங்குவிதி 5 (ஆ) (vi) இன்கீழ் தயாரிக்கப்பட்ட அட்டவணையில் அதன் பாவனையைச் சுட்டிக்காட்டுகின்றனவாக, "1 ஆவது தளப்பாகம்', "2 ஆவது தளப்பாகம்' முதலியனவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். கூட்டாட்சிச் சிறுகூறின் மொத்தப் பரப்பளவு ஒவ்வொரு கூட்டாட்சிச் சிறுகூறினதும் விபரங்களுடன் கணிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இயைபான சிறுகூறின் பெறுமதியினது நூற்றுவீதம் சுட்டிக்காட்டப்படுதலும் வேண்டும்;

(ஆ) விடயத்துக்கேற்ப, கூட்டாட்சியாதனமொன்று, தற்காலிகக் கூட்டாட்சியாதனமொன்று அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனமொன்று நிறுவப்படவுள்ளவிடத்து, இயைபான கூட்டாட்சி வரைபடம், கட்டிடத்தின் மேற்பரப்பு எல்லையைச் சுட்டிக்காட்டுகின்ற எல்லைக்குறிப்புடன் சேர்த்து மேலதிகமாக, கட்டிடத்துக்கு வெளியே அமைந்துள்ள காணிகளின் எல்லைகளின்மீது காணப்பட்ட பொது வடிகால்கள், ஊறவைப்புக்குழிகள் மற்றும் நச்சுத்தடைக்கழிவுத் தாங்கிகள் போன்ற அத்தகைய எல்லாப் பொது அம்சங்களையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். ஏலவேயுள்ள ஒரு கட்டிடத்திலிருந்து உத்தேசிக்கப்பட்ட கட்டிடமொன்றை வேறுபிரித்துக்காட்டுவதற்கான சுட்டிக்காட்டுகைகள் இருத்தல் வேண்டும்;

(இ) ஒவ்வொரு கட்டிடத்துக்கும் செங்குத்தான பிரிவொன்று வரையப்படுதல் வேண்டும்; அதன் அளவுத்திட்டம் 1:100 அல்லது 1:200 என்பதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இருமாடிகளுக்கிடையேயான உயரத்தையும் ஒவ்வொரு தளத்தினதும் தடிப்பத்தையும் காட்டுதலும் வேண்டும்;

(ஈ) ஒரு கூட்டாட்சிச் சிறுகூறின் முழுமொத்தப் பரப்பளவைக் கணக்கிடும்போது, வெளிப்புறச்சுவர்களின் மத்திய கோடு எல்லையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், கொங்குறீற்று வளைகள், சேவை மின்கம்பிவடக்குழாய் மற்றும் ஒரு சதுர மீற்றருக்கு மேற்பட்ட பொது இடைவெளிகள் என்பன தவிர்க்கப்படுதலும் வேண்டும்;

(உ) பங்குப்பெறுமதியானது, துணைநிலைச் சிறுகூறினதுட்பட நிலப்பரப்பினதும், பொது அம்சங்களின் பாவனையளவினதும், அது அமைந்துள்ள சிறுகூறின் மட்டத்தினதும், அதன் அமைவிடத்தினதும் அடிப்படையின்மீது கணக்கிடப்படுதல் வேண்டும். அதனை முழுவெண்ணாக்குவதற்கு அது 100 இனால் பெருக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) கட்டிமுடிக்கப்பட்ட அல்லது உத்தேசிக்கப்பட்ட கூட்டாட்சிக் கட்டிடத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் எல்லைகள், கூட்டாட்சி வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் எல்லைகளைப் போன்று அதே விதமானவையாகவிருத்தல் வேண்டும்;

(எ) ஒரு கட்டிடம் அல்லது ஆதனம் தொடர்பில் ஒரு தற்காலிகக் கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் சமர்ப்பிக்கப்படும் நேரத்தில், கட்டிட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாந்தன்மை காலங்கடந்துபோனதாக இருத்தலாகாது என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அனுமதிப்பத்திரத்தின் குறிப்பீட்டிலக்கமும் திகதியும் இயைபான கூட்டாட்சி வரைபடத்தில் சுட்டிக்காட்டப்படுதலும் வேண்டும்;

(ஏ) வதிவிட நோக்கம் மற்றும் வேறேதேனும் நோக்கம் போன்ற கலந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட கூட்டாட்சிக் கட்டிடமொன்றின் விடயத்தில், வேறுபிரித்துக்காட்டும் இலக்கங்களுடனான தனிவேறான வாகன நிறுத்திடங்கள், கட்டிடத்தின் பாவனைக்கு முட்டுக்கட்டையிடாமல் தனிவேறாக எல்லை குறிக்கப்படுதல் வேண்டும்;

(ஐ) ஒரு பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிடங்கள் நிரந்தரக் கோடுகளினால் அடையாளமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், உத்தேசிக்கப்பட்ட சிறுகூறுகள், தொடர்ச்சியற்ற கோடுகளின்மூலம் அல்லது கட்டிடத்தின் இலகுவான அடையாளங்காணுதலை இயலச் செய்யும் வகையில் வேறேதேனும் முறையைப் பயன்படுத்தி அடையாளமிடப்படுதலும் வேண்டும்;

(ஒ) ஒவ்வொரு சிறுகூறினதும் அமைவிடத்துக்கிணங்கவும் மாடி தொடர்பாகவும் குறித்தொதுக்கப்பட்ட தனிப்பட்ட இலக்கங்கள், வரிமதிப்பீட்டிலக்கம் ஏதேனுமிருப்பின் அது, மாடியின் அல்லது கொங்றீற்றுத் தளத்தின் மத்திய கோடு தொடர்பாகக் காட்டப்பட்ட ஆறு பக்கங்களின் எல்லை விபரங்கள், சிறுகூறின் பரப்பளவு, பரப்பளவின் பங்குப் பெறுமதியின நூற்று வீதம், மிகக்கிட்டிய அருகாமையிலுள்ள பொது அணுகுவழி, பொது அம்சங்களின் விபரங்கள் என்பன வரைபடத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு சிறுகூறினதும் எல்லைகள், வேறுபிரித்துக்காட்டப்படக்கூடிய வகையில் அடையாளமிடப்படுதலும் ஒவ்வோர் அறையினதும் நோக்கத்துடன் சேர்த்து வரைபடத்தில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும்;

(ஓ) விடயத்துக்கேற்ப, ஒரு கூட்டாட்சி வரைபடத்தை, தற்காலிகக் கூட்டாட்சி வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தைத் தயாரிக்கும்போது, இயலாமைக்குட்பட்டோர் தொடர்பான சட்டங்களும் கவனத்துட்கொள்ளப்படுதலும் வேண்டும்;

(ஔ) விடயத்துக்கேற்ப, ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி வரைபடத்தை, தற்காலிகக் கூட்டாட்சி வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தைத் திருத்துவதில், முன்னர் பதிவு செய்யப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பங்குப்பெறுமதியும் திருத்தப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பங்குப்பெறுமதியும், வெவ்வேறு பெறுமதிகள் இலகுவாக அடையாளங் காணப்படக்கூடியவகையில் முறையே சிவப்பிலும் கறுப்பிலும் தனிவேறான நிரைகளில் காட்டப்படுதல் வேண்டும்;

(க) வேறு சிறுகூறுகளுக்கு அணுக்கத்துக்கான வசதியில்லாதவையும் பிரதான சிறுகூறின் புறநீங்கலான பாவனைக்கு வரையறுக்கப்பட்டவையும் வரைபடத்தில் விவரிக்கப்பட்ட கூட்டாட்சிச் சிறுகூறின் வெளிப்புற எல்லைகளுக்கு அருகாமையிலும் வெளியேயும் அமைந்துள்ளவையுமான அடைக்கப்பட்ட மொட்டைமாடிகள் போன்ற துணைநிலைச் சிறுகூறுகளின் எல்லைகளும், விபரங்களும், துணைநிலைச் சிறுகூறுகளாக அட்டவணையில் தனிவேறாகச் சுட்டிக்காட்டப்படுதலும் பிரதான சிறுகூறின் சதுரப் பரப்பளவுக்குச் சேர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், பங்குப்பெறுமதியின் நூற்றுவீதம் அதற்கிணங்கக் கணக்கிடப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ங) விடயத்துக்கேற்ப, கூட்டாட்சியாதனத்தை, தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி யாதனத்தைப் பதிவு செய்வதற்கான பொறுப்பு அதன் சொந்தக்காரரின்மீதாக இருக்கின்றது.

**பாகம் II**

**இடம் குறித்தொதுக்கல்**

**8.** விடயத்துக்கேற்ப, கூட்டாட்சியாதனத்தில், தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தில் இடம் குறித்தொதுக்கலைத் திட்டமிடுவதில் பின்வரும் கருமங்கள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) விடயத்துக்கேற்ப, கூட்டாட்சியாதனமொன்றில், தற்காலிகக் கூட்டாட்சியாதனமொன்றில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனமொன்றில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட சிறுகூறுகள் உள்ளவிடத்து, முகாமைக் கூட்டுத்தாபனத்துக்காக

அலுவலக அறையொன்றாகப் பயன்படுத்தப்படுவதற்குக் கட்டிடத்தில் இடமொன்றும் சாதனங்களை வைத்திருப்பதற்கு வேறோர் அறையும் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) இயைபான எவையேனும் நோக்கங்களுக்காக, விடயத்துக்கேற்ப, கூட்டாட்சிச் சிறுகூறு ஒன்றை, பகுதியளவிலான கூட்டாட்சிச் சிறுகூறு ஒன்றை அல்லது தற்காலிகக் கூட்டாட்சிச் சிறுகூறு ஒன்றை விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்படும்போது, அச்சிறுகூறின் பரப்பளவு, இயைபான கூட்டாட்சி வரைபடத்தில், பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தில் அல்லது தற்காலிகக் கூட்டாட்சி வரைபடத்தில் காட்டப்பட்ட பரப்பளவுக்குச் சமமானதாகவிருத்தல் வேண்டும்;

(இ) ஏதேனும் கூட்டாட்சிச் சிறுகூறின் அல்லது அதன் பாகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நோக்கத்தை மாற்றுவதற்கான தேவை எழுமிடத்து, ஆணைக்குழுவிடமிருந்து அதற்கான எழுத்திலான முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஈ) பிரதான நீர்வழங்கல் முறைமையை அல்லது நீர் சேகரிப்புத் தாங்கிகளை வழங்குதல், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்;

(உ) மின்வழங்கல் மற்றும் நீர்வழங்கல் மானிகள், பொது அம்சங்கள் வழங்கப்படுகின்றவோர் இடத்தில் உறுதியாகப் பொருத்தப்படுதல் வேண்டும்;

(ஊ) வேறு சிறுகூறுகளின் ஊடாக வழங்கப்படும் விடயங்களில், விடயத்துக்கேற்ப, கூட்டாட்சியாதனத்தின், தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் ஒவ்வொரு சிறுகூறினதும் சேவைக் குழாய்களினால் பயன்படுத்தப்பட்ட இடமானது, இயைபான கூட்டாட்சி வரைபடத்தில், தற்காலிகக் கூட்டாட்சி வரைபடத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தில் பொது அம்சமாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்;

(எ) பொதுக் கூரையினால் விளைவிக்கப்பட்ட வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான அத்தகைய முறையில் வெப்பக்காப்புச் சாதனம் ஒழுங்கேற்பாடுசெய்யப்படுதல் வேண்டும்;

(ஏ) போதிய கொள்ளளவுடனான மின்பிறப்பாக்கியொன்று உயர்த்திக்காக நிறுவப்படுதல் வேண்டுமென்பதுடன், பொது விளக்குகள் தன்னியக்க ஆளியொன்றின்மூலம் ஒளியூட்டப்படுதலும் வேண்டும்;

(ஐ) வதிவிடச் சிறுகூறுகளுக்கு அணுக்கத்தை வழங்குகின்ற ஏதேனும் செல்வழி, குறைந்தபட்சம் 1.5 மீற்றர் அகலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஒ) மொட்டைமாடிச் சுவர்களின் உயரம், சர்வதேச நியமங்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்;

(ஓ) கூட்டாட்சிக் கட்டிடமொன்று தொடர்பில் நம்புறுதிச் சான்றிதழின் நியதிகளின்படி நம்புறுதிக் காலப்பகுதியின்போது எவரேனும் ஒப்பந்தகாரர் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும்பட்சத்தில், ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது அபிவிருத்தியாளர் அக்கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் பிணிக்கப்பட்டவராதல் வேண்டும்.

## பாகம் III

### கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் மற்றும் சிறுகூறுகளின் நிருவாகமும் முகாமையும்

**9**. விடயத்துக்கேற்ப, ஏதேனும் கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் அல்லது கூட்டாட்சிச் சிறுகூறின் முகாமையில், பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவது ஏதேனும் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடமையாதல் வேண்டும்:-

(அ) பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி வரைபடத்தில் வாகன நிறுத்திடங்கள் பொது அம்சங்களாக வரைவிலக்கணங்கூறப்படுமிடத்து, ஒவ்வோர் இருப்பாட்சியாளரும், அத்தகைய வாகன நிறுத்திடத்திற்கு வருகின்ற ஒழுங்குவரிசையின் அடிப்படையில் அவரது வாகனத்தை அத்தகைய நிறுத்திடத்தில் நிறுத்தி வைப்பதற்குப் பொது உரிமையொன்றைக் கொண்டிருப்பார்:

ஆயின், எவ்வாறாயினும், ஒரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கான துணைநிலைச் சிறுகூறுகளாக வாகன நிறுத்திடச் சிறுகூறுகள் அடையாளங் காணப்படுமிடத்து, அத்தகைய சிறுகூறின் சொந்தக்காரர், அவரது அல்லது அவளது

வாகனத்தை அத்தகைய துணைநிலைச் சிறகூறின் இடப்பரப்பினுள் நிறுத்தி வைப்பதற்குப் புறநீங்கலான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) கூட்டாட்சிச் சிறுகூறொன்றினுள்ளான அரிமானத்தின் அல்லது ஒழுக்கின் விடயத்திலும், அத்தகைய அரிமானத்தின் அல்லது ஒழுக்கின் தன்மை ஒரு தொழினுட்ப அறிக்கையினால் அடையாளங் காணப்பட்டுள்ளவிடத்தும், பொறுப்பாகவுள்ள திறத்தவர் அந்த அரிமானத்தை அல்லது ஒழுக்கைப் பழுதுபார்த்தல் வேண்டுமென்பதுடன், அத்திறத்தவர் அதனைப் பழுதுபார்க்கத் தவறினால், முகாமைக் கூட்டுத்தாபனம் அதனைப் பழுதுபார்த்து அத்திறத்தவரிடமிருந்து அத்தகைய பழுதுபார்த்தலின் ஆகுசெலவை அறவிடலாம்;

(இ) ஆளொருவர், ஒரு கூட்டாட்சிச் சிறுகூறை, அத்தகைய கூட்டாட்சிச் சிறுகூறின் ஏனைய இருப்பாட்சியாளர்களினால் பொது வாழ்வசதிகளின் பாவனைக்கு முட்டுக்கட்டையிடும் வகையிலான அல்லது அதன் ஏனைய இருப்பாட்சியாளர்களுக்கு வசதியீனம் விளைவிக்கும் வகையிலான அத்தகைய முறையில் பயன்படுத்துதலாகாது;

(ஈ) முகாமைக் கூட்டுத்தாபனம் தீயணைப்புக்கருவிகளைத் தொடர்ந்து பேணுதலும் அதன் தகுந்த பணியை உறுதிப்படுத்துதலும் வேண்டும்;

(உ) முகாமைக் கூட்டுத்தாபனம், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து, கூட்டாட்சிச் சிறுகூறுகளின் பங்குப்பெறுமதிக்கு விகிதாசாரமாக முகாமைக் கட்டணங்களை விதிப்பனவு செய்தல் வேண்டும்;

(ஊ) விடயத்துக்கேற்ப, ஒரு கூட்டாட்சியாதனத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தைப் பதிவு செய்யாமை தொடர்பான ஒரு முறைப்பாட்டின்மீது ஆணைக்குழுவுக்குமுன்னரான விசாரணையொன்று முடிவுறாதிருக்கையில், ஆளொருவர் ஆணைக்குழுவின் அனுமதியின்றி ஏனைய கூட்டாட்சிச் சிறுகூறுகளுள் எவற்றையும் விற்பனை செய்தலோ, ஈடுவைத்தலோ அல்லது குத்தகைக்குக் கொடுத்தலோ ஆகாது; அத்துடன்

(எ) கூட்டாட்சிச் சிறுகூறுகளின் உரித்துறுதிகள், அத்தகைய ஆதனத்தின் இயைபான கூட்டாட்சி வரைபடங்கள் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள பின்னர் அதன் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்பட்டிராதவிடத்து, அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது அபிவிருத்தியாளர், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கூட்டமொன்றில், எதிர்காலக் கொள்வனவாளர்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற எவையேனும் விதிகளை ஆக்குவதற்குத் தத்துவமெதனையும் கொண்டிருப்பதில்லை.

## பாகம் IV

## பொது ஏற்பாடுகள்

*10*. ஆளொருவர், விடயத்துக்கேற்ப, ஏதேனும் கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் தொடர்பில் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட இசைந்தொழுகுகைச் சான்றிதழை அத்தகைய ஆள் உடையவராக இருந்தாலொழிய, அவ்வாதனத்தை இருப்பாட்சி கொள்ளுதலாகாது.

*11*. இவ்வொழுங்குவிதிகளில்–

"இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் என்று பொருளாகும்;

"ஆணைக்குழு" என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்று பொருளாகும்; அத்துடன்

"கூட்டாட்சி முகாமை அதிகார சபைச் சட்டம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சி முகாமை அதிகாரசபைச் சட்டம் என்று பொருளாகும்.

## அட்டவணை I

**ஒழுங்குவிதி 2(1)**

| அலுவலகமுறையான பாவனைக்காக மட்டும் |
|---|
| இல. ……………………….. |
| பற்றுச்சீட்டின் திகதி : ………………………... |
| கொடுப்பனவுத் திகதி : ……………………… |

### கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு

### ஒரு கூட்டாட்சியாதனத்துக்கான பொது வாழ்வசதிகளும் பொது அம்சங்களும் தொடர்பிலான சான்றிதழுக்கான விண்ணப்பம்

1. சொந்தக்காரரின் /சொந்தக்காரர்களின் பெயர்/பெயர்கள் : ……………………………………………...............………..

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்/கடவுச்சீட்டிலக்கம்/கம்பனிப் பதிவிலக்கம் : ……………...................…………

3. அஞ்சல் முகவரி : ……………………………………………………………………………….........……………

4. மின்னஞ்சல் முகவரி : ……………………………………………………………………………..........…………

5. தொலைபேசி இல. : ……………………………………………………………..............................................……

6. கூட்டாட்சியாதனத்தின் பெயர் : ………………………………………………………….............…………………

7. கூட்டாட்சியாதனத்தின் முகவரி : ……………………………………………………………..........…………

8. கூட்டாட்சிச் சிறுகூறுகளின் எண்ணிக்கை.

   i. வதிவிட……………… ii. வர்த்தக ……………………

9. கூட்டாட்சியாதனத்தின் மொத்தத் தளப் பரப்பளவு ………………. சதுர மீற்றர்

   i. நில அளவையாளரின் பெயர்: ………… ii. கூட்டாட்சி வரைபட இல. : ……………………………

10. ஒரு கம்பனியின் விடயத்தில், கம்பனியின் விபரங்கள்: …………………………………………...............…………

11. காணியின் உரித்துறுதி : ………………………………………………………………………….........…………

12. கருத்திட்டத்துக்காக ஏதேனும் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், ஈடுகள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் பற்றிய விபரங்கள் : ……………………………………………………………………...................……………

13. விற்பனை உடன்படிக்கைகள் மற்றும் கூட்டாட்சிச் சிறுகூறுகளினது சொந்தக்காரர்களின் விபரங்கள்:
……………………………………………………………………………………………………........……………

14. கூட்டாட்சி வரைபடம் எக்காலப்பகுதிக்காகப் பதிவு செய்யப்படுவதற்கு உட்கருதப்படுகின்றது: ………….....................…

*15.* **பின்னிணைப்புக்கள்**:

(அ) ஆணைக்குழுவினால் கடைசியாக அங்கீகரிக்கப்பட்டவாறான திருத்தங்களுடனான கட்டிட வரைபடம் (மூலப்பிரதி மற்றும் இருபிரதிகள் வரைவுபெற்ற ஒரு கட்டிடக் கலைஞரினால் மற்றும் வரைவுபெற்ற ஒரு கட்டமைப்புச்சார் பொறியியலாளரினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்)

| குறிப்பீட்டில: | திகதி: |
|---|---|

(ஆ) கூட்டாட்சி வரைபடம் (மூலப்பிரதி/ இணைப்பிரதி/முப்பிரதி)

| குறிப்பீட்டில: | திகதி: |
|---|---|

(இ) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட இசைந்தொழுகுகைச் சான்றிதழ் (மூலப்பிரதி மற்றும் இருபிரதிகள்)

| குறிப்பீட்டில: | திகதி: |
|---|---|

(ஈ) காணியின் உரித்துறுதி (மூலப்பிரதி மற்றும் இருபிரதிகள்)

(உ) பேணுகை தொடர்பான முகாமை உத்தேசங்கள் (ஒரு கம்பெனியின் விடயத்தில், இரு பணிப்பாளர்களினால் கம்பெனி இலச்சினையுடன் கையொப்பமிடப் பட்டிருத்தல் வேண்டும்)

| குறிப்பீட்டில: | திகதி: |
|---|---|

(ஊ) இயைபான தகைமைபெற்ற ஆட்களினால் சான்றுப்படுத்தப்பட்ட நிர்மாணம் தொடர்பாகப் பின்வரும் திட்டங்கள்/ வரைதல்கள்

(i) நீர் வழங்கலுக்கான திட்டம்;

(ii) கழிவு நீரையகற்றுவதற்கான திட்டம்;

(iii) கழிவு நீர்க்கால் அகற்றுவதற்கான திட்டம்;

(iv) மழைநீர் வடிந்தோடுவதற்கான திட்டம்;

(v) குப்பைகூளத்தை முகாமை செய்வதற்கான திட்டம்;

(vi) மின்வழங்கலுக்கான திட்டம்;

(vii) தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கான திட்டம்;

(viii) மின்னுயர்த்திகளை வழங்குவதற்கான திட்டம்;

(ix) தீப்பாதுகாப்புகளை வழங்குவதற்கான திட்டம்;

(x) கட்டமைப்புச்சார் வரைதல்கள்; அத்துடன்

(xi) ஏனைய சேவைகளுக்கான திட்டங்கள்.

மேற்போந்த தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

| ....................................... | ....................................... | ....................................... |
|---|---|---|
| சொந்தக்காரரின்/சொந்தக்காரர்களின் அல்லது விண்ணப்பகாரரின் கையொப்பம் | வரைவுபெற்ற பொறியியலாளரின்/ வரைவுபெற்ற கட்டிடக்கலைஞரின் கையொப்பம் | பதிவுசெய்யப்பட்ட நிலஅளவையாளரின் கையொப்பம் |
| ....................................... | ....................................... | ....................................... |
| திகதி | திகதி | திகதி |

அலுவலகப் பாவனைக்காக

ஏனைய குறிப்புகள்

## அட்டவணை II

**ஒழுங்குவிதி 2(2)**

| **அலுவலகமுறையான பாவனைக்காக மட்டும்** |
|---|
| இல. ……………………….. |
| பற்றுச்சீட்டின் திகதி : ……………………... |
| கொடுப்பனவுத் திகதி : ……………………… |

## கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு

## ஒரு தற்காலிகக் கூட்டாட்சியாதனத்துக்கான பொது வாழ்வசதிகளும் பொது அம்சங்களும் தொடர்பிலானவொரு சான்றிதழுக்கான விண்ணப்பம்

1. சொந்தக்காரரின் /சொந்தக்காரர்களின் பெயர்/பெயர்கள் : ……………………………………………...

2. தேசிய அடையாள அட்டை இலக்கம்/கடவுச்சீட்டிலக்கம்/கம்பெனிப் பதிவிலக்கம் : ………………………

3. அஞ்சல் முகவரி : ………………………………………………………………………………………

4. மின்னஞ்சல் முகவரி : ……………………………………………………………………………

5. தொலைபேசி இல. : ………………………………………………………………………………

6. தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தின் பெயர் : ……………………………………………………….

7. தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தின் முகவரி : ……………………………………………………….

8. கூட்டாட்சிச் சிறுகூறுகளின் எண்ணிக்கை.

   i. வதிவிட……………................… ii. வர்த்தக ……………………

9. தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தின் மொத்தத் தளப் பரப்பளவு ………………. சதுர மீற்றர்கள்

   i. நிலஅளவையாளரின் பெயர்: ………… ii. கூட்டாட்சி வரைபட இல.: ……………………………

10. **பின்னிணைப்புக்கள்:**

(அ) ஆணைக்குழுவினால் கடைசியாக அங்கீகரிக்கப்பட்டவாறான திருத்தங்களுடன் கட்டிட வரைபடம்

| குறிப்பீட்டில: | திகதி : |
|---|---|

(ஆ) தற்காலிகக் கூட்டாட்சி வரைபடம் (மூலப்பிரதி/இணைப்பிரதி/முப்பிரதி)

| குறிப்பீட்டில: | திகதி : |
|---|---|

(இ) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியதிகளின்படி தகைமைபெற்ற ஓர் ஆளினால் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட, நிர்மாணம் தொடர்பான உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| குறிப்பீட்டில: | திகதி : |
|---|---|

(ஈ) காணியின் உரித்துறுதி
(மூலப்பிரதியும் மற்றும் இருபிரதிகளும்)

| குறிப்பீட்டில: | திகதி : |
|---|---|

(உ) பேணுகை தொடர்பான முகாமை உத்தேசங்கள் (கம்பெனியொன்றின் விடயத்தில் இரு பணிப்பாளர்களினால் கம்பெனி இலச்சினையுடன் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்)

(ஊ) இயைபான தகைமைபெற்ற ஆட்களினால் சான்றுப்படுத்தப்பட்ட நிர்மாணம் தொடர்பாகப் பின்வரும் திட்டங்கள்/ வரைதல்கள்

(i) நீர் வழங்கலுக்கான திட்டம்;

(ii) கழிவு நீரையகற்றுவதற்கான திட்டம்;

(iii) கழிவு நீர்க்கால் அகற்றுவதற்கான திட்டம்;

(iv) மழைநீர் வடிந்தோடுவதற்கான திட்டம்;

(v) திண்மக்கழிவை முகாமை செய்வதற்கான திட்டம்;

(vi) மின்வழங்கலுக்கான திட்டம்;

(vii) தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கான திட்டம்;

(viii) மின்னுயர்த்திகளை வழங்குவதற்கான திட்டம்;

(ix) தீப்பாதுகாப்புகளை வழங்குவதற்கான திட்டம்;

(x) கட்டமைப்புச்சார் வரைதல்கள்; அத்துடன்

(xi) ஏனைய சேவைகளுக்கான திட்டங்கள்.

மேற்போந்த தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| …………………………………….. | ……………………………………. | ……………………………………. |
| சொந்தக்காரரின்/சொந்தக்காரர்களின் அல்லது விண்ணப்பகாரரின் கையொப்பம் | வரைவுபெற்ற பொறியியலாளரின்/ வரைவுபெற்ற கட்டிடக்கலைஞரின் கையொப்பம் | பதிவுசெய்யப்பட்ட நிலஅளவையாளரின் கையொப்பம் |
| ……………………………………. | ……………………………………. | ……………………………………. |
| திகதி | திகதி | திகதி |

அலுவலகப் பாவனைக்காக

ஏனைய குறிப்புகள்

## அட்டவணை III

*ஒழுங்குவிதி 2(3)*

| அலுவலகமுறையான பாவனைக்காக மட்டும் |
|---|
| இல. ……………………….. |
| பற்றுச்சீட்டின் திகதி………………………... |
| கொடுப்பனவுத் திகதி ……………………… |

**கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு**

**பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பொது வாழ்வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் தொடர்பிலான சான்றிதழுக்கான விண்ணப்பம்**

1. சொந்தக்காரரின் /சொந்தக்காரர்களின் பெயர்/பெயர்கள் : …………………………………………………...

2. தேசிய அடையாள அட்டை இலக்கம்/கடவுச்சீட்டிலக்கம்/கம்பனிப் பதிவிலக்கம் : ………………………

3. அஞ்சல் முகவரி : ……………………………………………………………………………………

4. மின்னஞ்சல் முகவரி : ………………………………………………………………………………

5. தொலைபேசி இல. : ……………………………………………………………

6. பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பெயர் : ………………………………………………………

7. பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் முகவரி : ……………………………………………………

8. கூட்டாட்சிச் சிறுகூறுகளின் எண்ணிக்கை.

   i. வதிவிட……………… ii. வர்த்தக ……………………

9. பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் மொத்தத் தளப் பரப்பளவு ……………… சதுர மீற்றர்கள்

   i. நிலஅளவையாளரின் பெயர்: ………… ii. பகுதியளவிலான கூட்டாட்சி வரைபட இல. : ………

10. சான்றுப்படுத்தப்பட்ட கம்பெனியின் விபரங்கள்: ……………………………………………

11. காணியின் உரித்துறுதி : …………………………………………………………………………

12. கருத்திட்டத்துக்காக ஏதேனும் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், ஈடுகள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் பற்றிய விபரங்கள் : ……………………………………………………………………………

13. விற்பனை உடன்படிக்கைகள் மற்றும் கூட்டாட்சிச் சிறுகூறுகளினது சொந்தக்காரர்களின் விபரங்கள்:
    …………………………………………………………………………………………………

14. பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் எக்காலப்பகுதிக்காகப் பதிவு செய்யப்படுவதற்கு உட்கருதப்படுகின்றது: ...........

15. பின்னிணைப்புக்கள்:

| | | |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவினால் கடைசியாக அங்கீகரிக்கப்பட்டவாறான திருத்தங்களுடனான கட்டிட வரைபடம் (மூலப்பிரதி மற்றும் இருபிரதிகள் வரைவுபெற்ற ஒரு கட்டிடக் கலைஞரினால் மற்றும் வரைவுபெற்ற ஒரு கட்டமைப்புச்சார் பொறியியலாளரினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்) | குறிப்பீட்டில: | திகதி : |
| (ஆ) பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் (மூலப்பிரதி/ இணைப்பிரதி/ முப்பிரதி) | குறிப்பீட்டில: | திகதி : |
| (இ) கட்டிமுடித்த சிறுகூறுகளுக்கான இசைந்தொழுகுகைச் சான்றிதழ் | குறிப்பீட்டில: | திகதி : |
| (ஈ) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியதிகளின்படி தகைமைபெற்ற ஓர் ஆளினால் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட, நிர்மாணம் தொடர்பான உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம். | குறிப்பீட்டில: | திகதி : |
| (உ) காணியின் உரித்துறுதி (மூலப்பிரதி மற்றும் இருபிரதிகள்) | குறிப்பீட்டில: | திகதி : |
| (ஊ) பேணுகை தொடர்பான முகாமை உத்தேசங்கள் (ஒரு கம்பெனியின் விடயத்தில், இரு பணிப்பாளர்களினால் கம்பெனி இலச்சினையுடன் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்) | குறிப்பீட்டில: | திகதி : |

(எ) இயைபான தகைமைபெற்ற ஆட்களினால் சான்றுப்படுத்தப்பட்ட நிர்மாணம் தொடர்பாகப் பின்வரும் திட்டங்கள்/ வரைதல்கள்

(i) நீர் வழங்கலுக்கான திட்டம்;
(ii) கழிவு நீரையகற்றுவதற்கான திட்டம்;
(iii) கழிவு நீர்க்கால் அகற்றுவதற்கான திட்டம்;
(iv) மழைநீர் வடிந்தோடுவதற்கான திட்டம்;
(v) குப்பைகூளத்தை முகாமை செய்வதற்கான திட்டம்;
(vi) மின்வழங்கலுக்கான திட்டம்;
(vii) தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கான திட்டம்;
(viii) மின்னுயர்த்திகளை வழங்குவதற்கான திட்டம்;
(ix) தீப்பாதுகாப்புகளை வழங்குவதற்கான திட்டம்;
(x) கட்டமைப்புச்சார் வரைதல்கள் ; அத்துடன்
(xi) ஏனைய சேவைகளுக்கான திட்டங்கள்.

மேற்போந்த தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

| ...................................... | ...................................... | ...................................... |
|---|---|---|
| சொந்தக்காரரின்/சொந்தக்காரர்களின் அல்லது விண்ணப்பதாரரின் கையொப்பம் | வரைவுபெற்ற பொறியியலாளரின்/ வரைவுபெற்ற கட்டிடக்கலைஞரின் கையொப்பம் | பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளரின் கையொப்பம் |
| ...................................... | ...................................... | ...................................... |
| திகதி | திகதி | திகதி |

அலுவலகப் பாவனைக்காக

ஏனைய குறிப்புகள்

## அட்டவணை IV

*ஒழுங்குவிதி 3(1)(ஆ)*

### பொது வாழ்வசதிகள் தொடர்பான சேவைகளும் வரைபடங்களும் பற்றிய அறிக்கைகளைச் சான்றுப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆட்கள்

| | அறிக்கை/வரைபடம் | அறிக்கையை/வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அல்லது சான்றுப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆள் |
|---|---|---|
| 1. | கூட்டாட்சி வரைபடம், பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் அல்லது தற்காலிகக் கூட்டாட்சி வரைபடம். | ஓர் உரிமம்பெற்ற நில அளவையாளர் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர். |
| 2. | வடிவமைப்புக் கணக்கிடுதல்களுடனும் வரைதல்களுடனும் சேர்த்து கட்டமைப்புச்சார் வடிவமைப்பு அறிக்கை (அத்திவாரமும் கட்டிடமும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துக்கிணங்கவுள்ளனவென்றும் கட்டிடமானது கட்டமைப்புச்சார்ரீதியில் காப்பானதென்றும் கூறுகின்ற சான்றிதழ்). | இலங்கைப் பொறியியல் பேரவையின் உறுப்பினராகவுள்ளவரும், 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட கட்டமைப்புச்சார் பொறியியலாளர்கள் விவரக்கொத்தின்படி முறையான கட்டிட வகுதிக்காகத் தகைமைபெற்றவருமான வரைவுபெற்ற சிவில் பொறியியலாளரொருவர். |
| 3. | மின்வழங்குகை, நீர்வழங்குகை, கழிவு நீர் வெளியேற்றுகை (மழைநீரைப் பயன்படுத்துதலுட்பட) புயல்நீர் முகாமை மற்றும் தீக்காப்பு என்பன தொடர்பான வடிவமைப்புக் கணக்கிடுதல்களுடனும் வரைதல்களுடனும் சேர்த்து கட்டிடச் சேவைகள் வடிவமைப்பறிக்கை. | இலங்கைப் பொறியியல் பேரவையின் உறுப்பினராகவுள்ளவர்களும் 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட விவரக்கொத்துக்களின்படி முறையான துறைகளுக்காகத் தகைமைபெற்றவர்களுமான பின்வரும் வரைவுபெற்ற பொறியியலாளர்களுள் எவரும்:-<br><br>(i) வரைவுபெற்ற மின்பொறியியலாளர்;<br><br>(ii) வரைவுபெற்ற சிவில் பொறியியலாளர்;<br><br>(iii) வரைவுபெற்ற கட்டிடச் சேவைகள் பொறியியலாளர்;<br><br>(iv) வரைவுபெற்ற பொறிமுறைப் பொறியியலாளர். |
| 4. | குப்பைகூளத்தையகற்றுவதற்கான உத்தேசம் | தோட்ட முகாமைக் கூட்டுத்தாபனம். |
| 5. | தீயணைப்புச் சான்றிதழ் | மாநகரசபையின் தீயணைப்புத் திணைக்களம். |
| 6. | செலவினம் மீதான மதிப்பீடுகள் | இலங்கைப் பொறியியல் பேரவையின் உறுப்பினரொருவராகவுள்ள வரைவுபெற்ற சிவில் பொறியியலாளரொருவர் அல்லது இலங்கைக் கணிய அளவையாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவுள்ள வரைவுபெற்ற கணிய அளவையாளரொருவர். |

EOG 07 - 0269

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.